# மருதத்திணையில் பெண்களின் மாண்பு

# Maruthathinaiyil Pengalin Maanbu

***ம. மலர்***
உதவிப்பேராசிரியர்
அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சீனிவாசா நகர், ஊற்றங்கரை

**M. Malar**
*Assistant Professor*
*Athiyaman College of Arts and Science for Women*
*Srinivasa Nagar, Uthangarai*

*ஆய்வுச் சுருக்கம்*

*சங்க காலத்தை தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனலாம். பழந்தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்களனாய் அமைந்தவை சங்ககால மகளிரின் அரும்பண்புகளே ஆகும். ஆண்களுக்கு பெருமையும், வீரமும் வேண்டப்படுவன போல பெண்களுக்கு அன்பும், அடக்கமும், நாணமும் சிறந்ததாகக் கருதப்பட்டது.*

***முக்கியச் சொற்கள்:***

*மருதத்திணை, ஐங்குறு நூறு, மகளிர் பண்புகள், பரத்தையர், தலைவி, தோழி, பழந்தமிழ்*

## Abstract

*The Sangha period can be called the golden age of Tamil literature. The characteristics of Sangam women are the standard of ancient culture. Love, modesty and modesty were considered ideal for women, just as pride and valor were demanded of men. Tamils from their earliest days have glorified femininity. Thirunnana Sambandar said that because of a woman's auspiciousness, she can live well in the soil. Among the fruits that can be obtained in human life, the main fruit is to get a good life partner. All the riches in life are of no use if the riches of life partners are not matched. But if a person who does not get wealth, if he gets only the wealth of a good wife, his life will be successful. This article seeks to investigate the claims of Thalaivi, Thozhi and Parthaiyar in the Iynguru nootru Marutathinai songs about the virtues of such women.*

***Keywords:***

*Marutathinai, Iynguru Nooru, Five Women's Traits, Parathiyar, Thalaivi, Thozhi, Sangam Literature*

**Citation**

Malar, M. "Maruthathinaiyil Pengalin Maanbu." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 1, 2022, pp. 43–48.

*https://doi.org/10.5281/zenodo.20136112*

*தமிழர் தம் தொடக்க காலந்தொட்டே பெண்மையைப் போற்றி சிறப்பித்தார்கள். பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருக்கின்ற காரணத்தால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்றார் திருஞான சம்பந்தர். மனிதன் வாழ்க்கையிற் பெறத்தக்க பேறுகளில் தலையாய பேறு நல்ல வாழ்க்கைத் துணையைப் பெறுவதாகும். வாழ்க்கையில் எல்லாச் செல்வமும் பெற்றிருந்தும் இல்லாள் என்ற செல்வம் மட்டும் பொருந்தியிருக்கவில்லையென்றால் அதனால் ஒரு பயனும் இல்லை. இதனை திருவள்ளுவர்,*

***இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்***
***இல்லவள் மாணாக் கடை. - (குறள் - 53)***

*என இல்லாளின் சிறப்பை குறிப்பிடுகிறார். ஆனால் எச்செல்வத்தையும் பெறாத ஒருவன் நல்ல மனைவி எனும் செல்வத்தினை மட்டும் குறைவின்றிப் பெற்றிருப்பானேயானால் அவன் வாழ்க்கை வெற்றியடைந்து விடும். இத்தகைய பெண்களின் மேன்மைகள் பற்றி ஐங்குறு நூற்று மருதத்திணை பாடலில் இடம் பெற்ற தலைவி,தோழி,பரத்தையர் ஆகியோரின் கூற்றுகள் வழி ஆராய இக்கட்டுரை முற்படுகிறது.*

**மனையுறை மகளிர் பண்புகள்**

*மாந்தர் அடையத்தக்க பேறுகளுள் அறமே முதன்மையானது. அவ்வறம் போற்றவே அரசு தோன்றிற்று. நல்லன தழைக்க அல்லன கடிவதே அரசின் கடமையும் ஆயிற்று. இதனாலேயே கொடிது கடிந்து கோல் திருத்தி நாடாளச் சான்றோர் வற்புறுத்தினர். அரசனை வாழ்த்திய தலைவி அவனால் நிலைநிறுத்தப்படும் அறம் தழைக்குமாறும் அவ்வறத்திற்கு மாறான பாவம் நீங்குமாறும் வாழ்த்தினாள்.*

*கற்பும், காமமும், நல்ல ஒழுக்கமும் பெண்மைத் தன்மை பொருந்திய பொறுமைப் பண்பும், நிறைவுடைமையும் விருந்து போற்றும் மனநலமும்,சுற்றத்தினரைத் தழுவும் வழக்காறும் பிறவும் தலைமகளுக்குரிய பண்புகளாயிற்று.*

***"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்***
***மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்***
***விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்***
***பிறவும் அன்ன கிழவோள் பண்புகள்" (தொல் - கற்பியல் -11)***

*உழவின் ஆக்கத்திற்கு உழுபகடுகளும் மிகுந்த வருவாய்க்கு ஆக்களும் இன்றியமையாததாயின் வயல் வளமும், மக்கள் வளமும் ஒருசேர வேண்டிப் பெண்கள் நோன்பு இன்றியமையாததாயிருந்தது. பகைவர் தோல்வி தம் மன்னனுக்கு ஆக்கமாக,மன்னன் ஆக்கம் மக்களின் ஆக்கமாதலின் மன்னன் வெல்க என்று வாழ்த்தினாள் தலைவி.உலக நன்மையைக் கருதிய தலைவி இன்பத்திற்குக் காரணமான மறச் செயல்கள் அழியவும் விரும்பி 'சுநன்று பெரிது சிறக்க தீது இல்லாகுக!சுசு என விரும்பினாள்.*

**கற்பு நிலை**

*தலைவி தலைவனை ஊழ் கூட்ட முதற்கண் கண்டபோதே அவன் தன்னை மணந்து கொண்டதாகவே எண்ணிக் கொண்டாளாதலின், தலைவன் வரையாது களவு நீட்டித்த போது, உலக நன்மையொன்றையே கருதி, உலக வாழ்வுக்கு*

*இன்றியமையாத மழைவளத்தையும்,அதன் விளைவான செல்வச் செழிப்பையும் மட்டுமே விரும்பியிருந்தாள்.மழையின்றி மாநிலத்து உயிர்கட்கு நிலைபேறு இல்லை. மாறிபொழிய தேவர்குரிய பூசையும் விழாவும் இருந்தது. எனவே பசியும் வளனும் சுரக்க வாழ்த்துவது மரபாயிற்று.*

***"பசியும் பிணியும் பகையும் நீங்கி***
***வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"*** ***(மணி - 70-71)***

*சங்க கால மகளிர் உயிரை விடவும் கற்புடைய மகளிராக விளங்கினர். சங்க இலக்கியங்கள் பெண்களின் கற்புத் திறத்தைப் பற்றியும்,அக்கற்பினை தங்களின் தனிப்பெரும் குணமாக போற்றி காக்க வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. பெண்களுக்கு உரிய இக்கற்பை ஆண்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தவில்லை என்பதற்கு ஆண்கள் எத்தனை பெண்களோடும் உறவு கொள்ளலாம் என்ற பரத்தையரது ஒழுக்கத்தை சுட்டிக்காட்டுகிறது.*

*தலைவனின் பரத்தைமைச் செயலைக் கண்டு இகழாமல் அவனை ஏற்றுக்கொண்ட தலைவியின் செயல், அவளின் அந்த முதிர்ந்த மனப் பக்குவத்தைப் பெறுவதற்கு அவள் அடைந்த தாய்மைப் பேறே காரணம் என்கிறது.*

*கணவன் பரத்தைமையால் தன் கடமைகளில் நெகிழ்ந்தான் ஆயினும் அவன் மனைவி அதனை அறியும் அறிவ பெற்றிருக்கிறாள். இத்தகைய மனைவியரின் பொறையுணர்வும், இல்லறம் காக்கும் கடமையுணர்வுமே மருத நிலத்தில் குடும்பத்தைக் கட்டிக் காப்பதை அரிய முடிகிறது. பரத்தையற் பிரிந்த வழி தனிமையில் துயருற்ற அவள் மனைவி தன் குழந்தையின் மெய்தீண்டி உறங்கும் இயல்பினை,*

***"சுகமழபூ மென்சினைக்***
***காஞ்சி யூரன் கொடுமை நாணி"*** ***(குறு - 10)***

*குறுந்தொகை பாடல் எடுத்தியம்புகிறது.*

*தலைவன் கற்புக்கடம் பூண்ட குலமகளிரையும்,இழிந்த பரத்தையரையும் ஒரு நிகராகக் கொண்டு வாழ்கிறான் என்பதை உள்ளுறுத்துவதாகும்.*

*இல்வாழ்க்கையில் பரத்தையர் குறிக்கீட்டினால் அகமோதலுக்கு ஆட்படும் மனைவயர் தம் கணவருடன் ஒத்தியங்கி விருந்தோம்பல் வாயிலாகவே அகமோதலைத் தவிர்த்துக் கொண்டுள்ளனர். என்னதான் பரத்தைமையொழுக்கம் அனுமதிக்கப்பட்ட சமுதாய அமைப்பாக இருந்தாலும் மருதப்பாடல்கள் குலமகளாகிய மனைவியோடு விலைமகளாகிய பரத்தை ஒவ்வாள் என்றே பேசுவது மனைவியைப் பெருமைப்படுத்துவதாக அமைகிறது.*

**தோழியின் சிறப்பு**

*தலைவனது அன்பு,தலைவியின் அறியாமை,தன்னுடைய அச்சம் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டி தோழி அறிவுரை வழங்குவது சங்க அகப்பாடல் மரபாகும். தன் குழந்தைகள் வெறுக்கத் தக்கன செய்யினும் பொறுத்து அன்பு செய்யும் பண்பு தாய்மைப் பண்பாதலின், தலைவன் பிழைப்பொறுத்த தலைவியை அன்னை எனச் சிறப்பித்தாள் தோழி.*

*தலைவியின் வாழ்வே தம் வாழ்வும் ஆதலின் தோழியும் ஆயத்தார் பிறரும் தலைவியின் காதல் வாழ்வு சிறக்கவும், களவு கற்பாக மாறி அவள் மகவீன்று மனையறத்தில் பொலியவும் விரும்பி ''தண்டுறையூரன் வரைக'' என வேண்டினர். களவு வெளிப்படின் அல் தோன்றும் ஆயத்தார் அஞ்சினர் ஆதலின் தலைவியின் கற்பைக் காப்பாற்ற இதனினும் வேறு வழியில்லையெனத் துணிந்த போது தோழி உடன் போக்கினுக்கு உதவுவது அறநெறியாகக் கருதப்பட்டது.*

*தலைமகள் ஒரு தலைவன்பால் காதல் கொண்டதனால் அவன் பிரிந்த போது உடல் மெலியுற்றாள். அம்மெலிவினைத் தெய்வத்தால் வந்ததாக கொண்ட அவள் உறவினர் முருகவேளுக்கு வெறியாட்டு நிகழ்த்த முயன்றனர். அஃதுணர்ந்த தோழி,தலைவின் கற்பினைக் காப்பான் வேண்டிச் செவிலியின் பால் உண்மையை வெளிப்படுத்துகிறாள். பரத்தையரையே தன் மனைவியர் போல் கருதுவான் தலைவன் என்னும் கருத்தில் விதிப்படி மணந்த மனைவி ஒருத்தி இருப்பதாக அவன் கருதிட மறந்தான் எனவும்,நம்மூரின் கண் உள்ள பொய்கையில் வாழும் ஆம்பலின் நார் உரிக்கப்பட்ட தண்டினும் மிகுதியாக ஒளிர்ந்த காலம் ஒன்றிருந்தது. அஃது இப்பொழுது கழிந்தது. இப்பொழுது அது தன் சிறப்பிழந்து பசலையுற்றது கான் எனவும்,*

***"பூப்போல் உண்கண் பொன்போர்த் தனவே" (ஐங் - 16)***

*பலவாறாக தலைவி தோலியிடம் புலம்பியபோது, தோழியானவள் தலைவன் பரத்தையர் வீட்டிலிருந்து தூதுவர்களை அனுப்பினான். ஆங்கனம் வந்தார்க்குத் தலைவி பல நாளாகக் காத்திருந்து அவள் கண்கள் நிறமாறியதனைச் சொல்லித்,தலைவி தான் அவனை நினைத்ததன் பயனாகத் தன் கைவளை கழன்றமையும் கூறி வாயில் மறுத்துரைக்கிறாள்.*

*நின்னை மணந்த தலைவியோ எப்போதும் பசலையணிந்தாள் எனத் தலைவனின் தீயொழுக்கத்தினைச் சுட்டிக் கூறினாள் தோழி. மென்மையும் குளிர்ச்சியும் கொண்ட வயலைக் கொடியால் மாலை தொடுப்பினும் இயல்பாகவே சிவந்த தலைவியின் மெல்விரல்கள் மேலும் சிவக்கும் என்பது தலைவியின் மென்மையான தன்மையை கூறுவதற்பொருட்டும் அழகும் இளமையும் கூடியவள் தலைவி என்பதனை விளக்கியும்,இத்தகையாளை மனைவியாகப் பெற்ற நீபுறப்பெண்டிரை நயந்து அவட்கு ஏதம் சூழ்ந்தனையே எனத் தலைவனை இடித்துரைத்தாள் தோழி.*

*பொய்கையாவது மாந்தரால் தோண்டப் பட்டதன்றி இயற்கையிலேயே அமைந்ததாகும். அது பெரியதாயினும் நீரால் நிறையப் பெற்றதாயின் பயனில்லை. ஆமைகள் கரையின்கண் முட்டையிட்டுப் புதைத்து நீங்கும். முட்டையிலிருந்து பார்ப்புகள் வெளிப்பட்டு நீர்க்குள் செல்லும். அவை தாயால் வளர்க்கப்பெறுவதில்லை. பார்ப்புகள் தாயின் முகத்தை நோக்கியே வாழும். ஆமைப் பார்ப்புகட்கு அவற்றின் தாய்முகம் அத்தகையது நின் மார்பு மனையாட்கு என்றாள். ஆமையின் பார்ப்புகள் தாய் முகம் நோக்கி வளர்ந்தார் போலவே இவளும். இவளை நீ அணைத்து இன்புறுத்தாவிடினும் நின் மார்பைப் பல்கால் காண்டலிலேயே இன்பம் எய்துகிறாள். நினையன்றி இவளுக்குப் புகலில்லை என்பதனை அறிவுடைய நீ புரிந்து கொண்டு வாழ்வாயாக, அங்ஙனம் வாழ்வதே இல்லறத்திற் போற்ற வேண்டி அறம் என்று பலவாராக அறிவுரை வழங்குகின்றாள்.*

*தலைவன் நம்மைப் பிரிந்தாள் என்பது உண்மைதான் என்றாலும் அவன் விரைவில் மீண்டும் இங்கு வரத்தவறான்,எனவும்,தலைவன் தன்பாலே மிகுதியான அன்புடையவன் எனத் தலைவி கருதவேண்டும் என்பதும் தோழியின் விருப்பமாதலின் வண்டுபிணி ஆம்பல் ஊரன் தலைவன் எனவே,சில போது பிற இடங்களிலும் செல்வதுண்டெனினும் அவற்றை மீண்டும் தம்பால் வருவித்துக் கொள்ளும் இயல்புடைய தேனைத் தம்பால் உடையவனாய் அவற்றைப் பிணித்து கொள்வது போன்று, தலைவன் உலகியல் பற்றித் தன் மனைக்குச் சென்றானாயினும் மீண்டும் தன் மனையை நாடி வருவது அழகும் பெண்மை நலமும் தன்னிடம் உண்டு என்று தலைவியிடம் கூறுகிறாள் தோழி.*

**"*நயந்தோர் உண்கண் பயந்து பணிமல்க*"** ***(ஐங் - 34)***

*துலைவி தலைவனை நினைத்ததன் பயனாக கைவளை கழன்றமை பொருட்டும், கண்டாரெல்லாம் கயலோவென ஐயவுற்று வியந்த கண்கள் தலைவன் பிரிவையாற்றாமல் அழகிழந்து நிறம் கெட்டனவாதலின் தலைவனை ஏற்றுக் கொள்வது தவிர வேறு வழியில்லை எனக் கூறி "நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோம் என்னும் பெருந்தகைப் பெண்டிர் இயல்பையொட்டி,அவர் தம் சிறுமையால் நம்மை மறந்து அமையினும் நம் பெருமையால் அவரை மன்னிப்பது சால்பு என தலைவிக்கு அறிவுறுத்துகிறாள்.*

**முடிவுரை**

*தலைவனின் பரத்தையர் பிரிவு தலைவியை எவ்வகையிலும் பாதிக்கவில்லையாயினும் தலைவனின் பிரிவால் வீட்டின் கண் வாடிக்கிடப்பாள். பிறகு கூடும்போது மகிழ்ந்து நலம் பெறுவாள் என்பதே மருதநில இல்லற பெண்களின் வாழ்வியல் பண்பாடாகும்.*

*பெண்ணாகிய மனைவியால் தான் ஒரு குடும்பத்தில் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கையும்,பண்பாடு நிறைந்த வாழ்க்கையும் மருதநில மக்களிடம் இருந்ததை அறிய முடிகிறது. மனையாளாகிய தலைவி இல்லத்தைக் கட்டிக் காத்து ஆள்பவளாக அவளைக் கண்டோம். பரத்தியரை நாடிச் சென்ற தலைவனும் தலைவிமாட்டுக் கொண்ட காதல் உண்மையுடையது ஆதலின் மீண்டும் தலைவி வாழும் வீட்டிற்கு வருகிறான். இதனால் மனையுரைமை நன்கு விளக்கமுறும்.*

**துணைநூற்பட்டியல்**


*1. திருக்குறள் - (53)*
*2. தொல்காப்பியம் (கற்பியல் -11)*
*3. மணிமேகலை (70-71)*
*4. குறுந்தொகை (10)*
*5. ஐங்குறுநூறு (16-34)*


## References


*1. Thirukkural - (53)*
*2. Tolkappiyam (Karpiyal-11)*
*3. Manimegalai (70-71)*
*4. Kurunthogai (10)*
*5. Iynguru nooru (16—34)*